‘நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்’ என்கிறது ஒரு தமிழ்த் திரைப்படப்பாடல். ஒவ்வொரு சமூகமும் அச்சமூகத்தில் இருக்கும் குடும்பங்களாலேயே கட்டியெழுப்பப்படுகின்றது. குடும்பங்கள் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்குத் தான் அந்த சமூகமும் ஆரோக்கியமாக இருக்கும். ஒரு குடும்பம் என்பது பல உறவுகளின் தொகுப்பு. ஒரு குடும்பம் அன்பு என்ற அத்திவாரத்திலே கட்டியெழுப்பப்படவேண்டும். கணவன் - மனைவிக்கிடையேயான அன்பு தான் ஒரு குடும்பத்தின் உணர்வுச் சூழலை நிர்ணயிக்கின்றது. கணவன் மனைவிக்கிடையே அன்பும் ஆழமான உறவும் இருக்கிறபோது அக்குடும்பத்தில் வளரும் பிள்ளைகளுக்கு அது ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

ஒரு குடும்பத்தில் உறவுகள் தொடர்ந்து வளரவேண்டும் என்றால் **ஒத்துணர்வு** என்ற பண்பு அக்குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கிடையேயிருத்தல் மிகவும் முக்கியமானதாகும். ஒத்துணர்வு என்பது அடுத்தவர் உண்மையில் எப்படிப்பட்ட உணர்வை அனுபவிக்கிறார் என்பதை அடுத்தவர் நிலையில் இருந்து புரிந்துகொள்ளும் தன்மை. ஒத்துணர்வு வளரவேண்டும் என்றால் ஒருவர் ஒருவரது கதையை நாம் செவிமடுக்கவேண்டும். ஒருவர் ஒருவரது உணர்வுகளை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

தற்கால உலகம் தனிநபர் சுதந்திரத்துக்கும் நிறைவுக்கும் முன்னுரிமை கொடுப்பதால் பல சந்தர்ப்பங்களில் குடும்பம் என்னும் அலகு பாதிப்புக்குள்ளாகிறது. உலகத்திலே குடும்பத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பண்பாடுகளில் எமது பண்பாடும் ஒன்று. தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை. அன்னை தந்தையே அன்பின் எல்லை. என்று ஒரு குடும்பத்தில் தாய், தந்தையின் முக்கியத்துவத்தை அழகாகச்சொல்கிறது ஒரு பாடல்.

எமது தமிழ்ப்பண்பாடு தாய், தந்தையரைப்போற்றும் ஒரு பண்பாடு. புலம்பெயர் நாடுகளில் வளரும் பிள்ளைகள் இதனை அதிகமாக உணர்ந்துகொள்ள பெரியவர்கள் நாம் துணைசெய்ய வேண்டும். அது போல பெற்றோர்களும் பிள்ளைகள் வளருகின்ற பன்முகப் பண்பாட்டுச் சூழலைப்புரிந்து அதற்கேற்ற விதமாகப் பிள்ளைகளை வளர்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதிகாரம் செலுத்தும் தன்மைகளை நீக்கி ஒருவர் மற்றவருக்குப் பணிபுரியும் தளமாக குடும்பத்தை நாம் மாற்றுவோமாக இருந்தால் ஒவ்வொரு குடும்பமும் அன்பு மிளிர்கின்ற குடும்பமாக இருக்கும். ‘என்னோடு இணைந்திருந்தாலன்றி நீங்கள் கனிதர இயலாது’ என்று ஆண்டவர் இயேசு கூறுகின்றார் எனவே ஆண்டவரது அன்பில் நிலைத்து நின்று எமது குடும்பங்களையும் அன்புப்பாதையிலே கட்டியெழுப்புவோம்.

**ச.எ.றெஜினோல்ட் அ.ம.தி.**